பக்கங்கள்: 07
# காலைக்கதிர்
Kālaikkathir
மாலைப்பதிப்பு
சாயல் 02 வள்ளுவர் ஆண்டு 2053 மாசி 23 செவ்வாய்க்கிழமை 08.03.2022 கதிர் 349

## மிருகக்காட்சிசாலைகளுக்கான நுழைவுக் கட்டணம் அதிகரிப்பு

தெஹிவளை, பின்னவல மிருகக்காட்சி சாலைகளுக்கான நுழைவுக் கட்டணம் அதிகரிக்கப்பட்டுள்ளது என அறிக்கை ஒன்றை வெளியிட்டு மிருகக்காட்சிசாலை திணைக்களம் தெரிவித்துள்ளது.

அதற்கமைய, தற்போது 110 ரூபாவாகக் காணப்பட்ட நுழைவுக் 2

# வடக்கில் அரசின் பௌத்தமயமாக்கல் திட்டம் படுதீவிரம் வவுனியா தெற்கு பிரதேச செயலகத்திலும் புத்தர் சிலை



## புத்திஜீவிகள் கடும் விசனம்

(வவுனியா நிருபர்)

தமிழ் மக்கள் செறிவாக வாழும் பகுதியில் அமைந்துள்ள வவுனியா தெற்கு பிரதேச செயலக வளாகத்திலும் புத்தர் சிலை நிறுவப்பட்டுள்ளது.

வவுனியா தெற்கு பிரதேச செயலாளர் மற்றும் பௌத்த பிக்குகள் இணைந்து நேற்று குறித்த புத்தர் சிலையை பிரதிஷ்டை செய்தனர்.

வவுனியா தெற்கு பிரதேச செயலகமானது (சிங்கள பிரதேச செயலகம்) வவுனியா, மன்னார் வீதியில் காமினி வித்தியாலயத்துக்கு அண்மையில் உள்ள ரயில் கடவை அருகில் அமைந்துள்ளது.

குறித்த பகுதியானது தமிழ் மக்கள் செறிவாக வாழும் 2

# தமிழ், முஸ்லிம் கட்சிகளுடன் நீடித்த தீர்வுக்குப் பேசுங்கள்!

## ஜெனிவாவில் இலங்கைக்கு அமெரிக்கா அறிவுரை

ஜெனிவா, மார்ச்08

இலங்கையில் நின்று, நிலைத்து , நீடிக்கக் கூடிய ஓர் அரசியல் தீர்வை எட்டுவதற்காக தமிழ், முஸ்லிம் கட்சிகளுடன் பேச்சு நடத்துமாறு இலங்கை அரசை அமெரிக்கா வலியுறுத்தியுள்ளது. 2

# இலங்கைக்கு இந்தியா முழுமையான ஆதரவு!



## ஜெய்சங்கர் வாக்குறுதி; டெல்லி பறக்கிறார் பஸில்

இந்திய வெளிவிவகார அமைச்சர் எஸ்.ஜெய்சங்கரும் இலங்கை நிதி அமைச்சர் பஸில் ராஜபக்ஷவும் நேற்று தொலைபேசியில் உரையாடியுள்ளனர். 2

## புதிய அமெ. தூதர் – சம்பந்தன் சந்திப்பு



கொழும்புக்கான புதிய அமெரிக்கத் தூதுவராகப் பதவியேற்றுள்ள ஜூலி கே சுங் இன்று காலை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் எம்.பியை அவரது இல்லத்தில் சென்று சந்தித்தார். இந்தச் சந்திப்பின் போது கூட்டமைப்பின் பேச்சாளர் சுமந்திரன் எம்.பியும் உடனிருந்தார்.

# பண்டாரவளையில் அரசுக்கு எதிராக தீப்பந்தப் போராட்டம்

## பெருந்திரளானோர் பங்கேற்பு



பண்டாரவளை மாநகரில், பல்வேறு கோரிக்கைகளை முன்வைத்து, ஐக்கிய மக்கள் சக்தியினரால் 2

# ராஜபக்ஷக்களால் மட்டுமே உரிய தீர்வு காண முடியும்!

## இந்திக அனுருத்த கூறுகின்றார்

நாட்டு மக்களுக்கு நியாயமானதை வழங்கவும், 2

# காடையர் குழு அட்டகாசம்

யாழ்., மானிப்பாய் செல்லமுத்து விளையாட்டரங்குப் பகுதியிலுள்ள வீடொன்றுக்குள் அத்துமீறி நுழைந்த காடையர் கும்பல் ஹயஸ் ரக வாகனத்தை அடித்துச் 2



## முல்லைத்தீவு நிலைமை; இராதா – ரவி பேச்சு

முன்னாள் வடக்கு மாகாண சபை உறுப்பினர் துரைராசா ரவிகரனுக்கும், தமிழ்நாடு - திராவிட முன்னேற்றக் கழகத்தின் தலைமைக்கழகச் 2

# மஹிந்தவின் அறிக்கை படுமுட்டாள்தனமானது!

## போட்டுத் தாக்குகின்றார் விமல்



கடுமையான டொலர் தட்டுப்பாட்டுக்கு மத்தியில், எரிபொருள் நெருக்கடி தொடர்பாக பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ வெளியிட்ட அறிக்கை நகைப்புக்குரியது; அது படுமுட்டாள்தனமானது. இவ்வாறு ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணியின் பங்காளிக் கட்சியான தேசிய சுதந்திர முன்னணியின் 2



## ராஜபக்ஷக்களால்.......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அவர்களின் கோரிக்கைகளை நிறைவேற்றவும் ராஜபக்ஷக்களால் மாத்திரமே முடியும். பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவால் மாத்திரமே பிரச்சினைகளுக்குப் பதில் சொல்ல முடியும்.

- இவ்வாறு இராஜாங்க அமைச்சர் இந்திக அனுருத்த தெரிவித்தார்.

இது தொடர்பில் ஊடகங்களிடம் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

நாட்டு மக்களின் உண்மையான பிரச்சினையை அடையாளம் கண்டு உண்மையான பிரச்சினைக்குப் பதிலளிக்கும் அரசியல் பிரமுகர்கள் இந்த நாட்டில் மிகக் குறைவு.

அவ்வாறு உண்மையான பிரச்சினைக்குத் தீர்வைக் காணக்கூடிய அரசியல்பிரமுகர்ஒருவர்இருப்பாராயின் அது பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ ஒருவரேயாவார். ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவின் கீழ் மக்களுக்கு நியாயமானதை வழங்குபவர்கள் தற்போதைய பிரதமர் உட்பட இந்த ராஜபக்ஷர்களே தவிர வேறு யாரும் இல்லை என்பதை இந்த நாட்டு மக்களுக்கு நாம் பொறுப்புடன் கூறுகின்றோம்.

மக்களின் கோரிக்கைகளை சரியாக நிறைவேற்றுபவர்கள் இந்த ராஜபக்ஷர்களே - என்றார்.

## காடையர்.......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சேதமாக்கியுள்ளது.நேற்றிரவு 9.30 மணியளவில் வீட்டுக்குள் புகுந்த குறித்த கும்பல் வீட்டின் முன்பாக நிறுத்தி வைக்கப்பட்டிருந்த வாகனத்தைத் தாக்கியுள்ளது.

இதனால் வாகனத்தின் கண்ணாடிகள் சேதமாக்கப்பட்டுள்ளன.

இது தொடர்பில் மேலதிக விசாரணைகளை மானிப்பாய் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

## இலங்கைக்கு.......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இந்நிலையில், சுமுகமான கலந்துரையாடல் பலனளித்துள்ளது என இலங்கைக்கான இந்திய உயர் தூதரகம் தெரிவித்துள்ளது.

இந்திய வெளிவிவகார அமைச்சர் இலங்கைக்கு அனைத்து வழிகளிலும் முழுமையான ஆதரவு வழங்கப்படும் என்று இதன்போது உறுதியளித்துள்ளார்.

மேலும், இலங்கை நிதி அமைச்சர் பஸில் ராஜபக்ஷ இந்த மாத நடுப்பகுதியில் இந்தியாவுக்கு விஜயம் செய்யவுள்ளார் எனவும் இந்திய உயர் தூதரகம் மேலும் தெரிவித்துள்ளது.

## தமிழ், முஸ்லிம்........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

"சகலரையும் ஒன்றிணைத்து, நிரந்தரத் தீர்வு ஒன்றை நோக்கி முன்னேறுவதற்காக தமிழ், முஸ்லிம் கட்சிகளுடனும், சிவில் சமூக நிறுவனங்களுடனும் ஈடுபட்டு செயற்படுமாறு நாம் இலங்கை அரசை கோருகின்றோம்"

- என்று ஜெனிவாவில் ஐ.நா. மனித உரிமைகள் கவுன்சிலின் நேற்றைய அமர்வில் இலங்கை தொடர்பான கலந்துரையாடலின்போது அமெரிக்கா தெரிவித்துள்ளது.

இலங்கையில் முக்கியமான பல மனித உரிமைகள் வழக்குகள் பின்னடைவு கண்டிருப்பது குறித்து கவலை தெரிவித்துள்ள அமெரிக்கா, மிக முக்கியமான மனித உரிமை மீறல் வழக்கொன்றில் சம்பந்தப்பட்ட ஒருவர் மாகாண ஆளுநராக நியமிக்கப்பட்டிருக்கின்றமை பெரும் அதிர்ச்சியைத் தருவதாக சுட்டிக்காட்டியுள்ளது.

வடக்கு, கிழக்கில் காணிகள், பொதுமக்களின் நிலங்கள் ஆக்கிரமிக்கப்படுவது குறித்தும் இந்த உரையில் அமெரிக்கா கவலை தெரிவித்துள்ளது.

சிவில் சமூக தரப்புகள் கடும் கண்காணிப்புக்கும் துன்புறுத்தல்களுக்கு உள்ளாவது குறித்தும், சிவில் நிர்வாகம் இராணுவமயப்படுத்தப்படுவதற்கு எதிராகவும் அமெரிக்கா இந்தக் கூட்டத்தில் கருத்து வெளியிட்டமை குறிப்பிடத்தக்கது.

## வடக்கில்..........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பகுதியாக உள்ளதுடன், குறித்த பிரதேச செயலகத்திலும் உதவிப் பிரதேச செயலாளர் உட்பட அதிகளவிலான உத்தியோகத்தர்கள் தமிழ், முஸ்லிம் மக்களாகவே உள்ள நிலையில் குறித்த பிரதேச செயலக வளாகத்தில் பிரமாண்டமாக பீடம் ஒன்று அமைக்கப்பட்டு புத்தருடைய சிலை நிறுவப்பட்டுள்ளது.

வடக்கில் இடம்பெற்று வரும் அரசின் பௌத்தமயமாக்கல் திட்டங்களுக்குப் பிரதேச செயலகங்களும் உடந்தையாக செயற்படுகின்றனவாவெனப்புத்துஜீவிகள் கடும் விசனத்துடன் கேள்வி எழுப்பியுள்ளனர். (100)

## பண்டாரவளையில்.......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பாரியளவிலான தீப்பந்தப் போராட்டம் நேற்றிரவு 7 மணியிலிருந்து 10 மணி வரை நடத்தப்பட்டது.

அரசுக்கு எதிரான இந்தப் போராட்டத்தில் ஆண்களும், பெண்களுமாகப் பெருந்திரளானோர் தீப்பந்தங்களுடன் பங்கேற்றனர்.

பண்டாரவளை மாநகரசபை மைதானத்திலிருந்து, போராட்டக்காரர்கள் பேரணியாகப் பண்டாரவளை மாநகர் வழியாக, அதன் சுற்று வட்டாரத்தில் சுமார் மூன்று மணி நேரமாக எதிர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

இதனால் வாகனப் போக்குவரத்தும் சுமார் மூன்று மணி நேரம் தடைப்பட்டு, வாகன நெரிசல்களும் இடம்பெற்றிருந்தன.

மின் துண்டிப்பு நெருக்கடி, எரிவாயு, எரிபொருள் தட்டுப்பாடுகள், அத்தியாவசியப் பொருள்கள் தட்டுப்பாடுகள் ஆகியவற்றைக் கண்டித்தே இந்தத் தீப்பந்தப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

## முல்லைத்தீவு...........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

செய்தி தொடர்புச் செயலாளர் கே.எஸ் இராதாகிருஷ்ணனுக்கும் இடையில் சந்திப்பு நடைபெற்றது.

இந்தச் சந்திப்பில் முல்லைத்தீவின் தற்கால நிலைமைகள் தொடர்பிலும், தமிழ் மக்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் தொடர்பிலும் விரிவாகக் கலந்துரையாடப்பட்டன.

இதில் கரைதுறைப்பற்று பிரதேச சபை உறுப்பினர் சின்னராசா லோகேஸ்வரனும் பங்கேற்றிருந்தார்.

## மஹிந்தவின் ...........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தலைவர் விமல் வீரவன்ஸ எம்.பி. தெரிவித்தார்.

இது தொடர்பில் ஊடகங்களிடம் அவர் மேலும் கூறியதாவது:-

எரிபொருள் தட்டுப்பாடு ஏற்படும் என அமைச்சர்கள் அறிக்கை விட்டமையால், நாட்டில் எரிபொருள் நெருக்கடி ஏற்பட்டுள்ளது எனப் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்த கருத்தை ஏற்றுக் கொள்ள முடியாது.

இன்னும் இரண்டு அல்லது மூன்று நாள்களில் எரிபொருள் கையிருப்பு தீர்ந்துவிடும் என்ற அறிக்கைகளால் இந்தத் தட்டுப்பாடு ஏற்படவில்லை.

வங்கிகளில் கடன் கடிதங்களை திறக்க முடியாவிட்டால், எரிபொருள் மற்றும் எரிவாயு தொகுதிகள் நாட்டுக்குள் நுழைய முடியாது.

டொலர் நெருக்கடியை நிராகரிக்கும் நபர்களின் அறிக்கைகள் மிகவும் தவறானவை - என்றார்.


விளம்பரத் தொடர்புகளுக்கு –
தொலைபேசி இலக்கம்-
076 443 8622

## மிருகக் காட்சி.......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கட்டணம் 200 ரூபாவாக அதிகரிக்கப்பட்டுள்ளது. அத்துடன், சிறுவர்களுக்கான நுழைவுக் கட்டணம் 30 ரூபாவிலிருந்து 50 ரூபாவாக அதிகரிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, ரிதியகம மிருகக் காட்சிசாலைக்கான நுழைவுக்கட்டணமும் அதிகரிக்கப்பட்டுள்ளது. இதற்கமைய, பெரியவர்களுக்கான கட்டணம் 350 ரூபாவிலிருந்து 500 ரூபாவாக அதிகரித்துள்ளது. அத்துடன், சிறுவர்களுக்கான நுழைவுக் கட்டணம் 120 ரூபாவிலிருந்து 150 ரூபாவாக அதிகரித்துள்ளது.




N Flash Super Detergent
வேலை வாய்ப்பு
வடக்கில் முன்னோடிகளாகத் திகழும் NFlash குழுமத்தின் கீழ்க் காணும் வேலை வாய்ப்புக்கள்
தலைமை கணக்காளர் - 20 வருட அனுபவம்
கணனி உத்தியோகத்தர் - உயர்தரத் தகைமை, சாதாரண டிப்ளோமா
காட்சியறை முகாமையாளர் - யாழ்ப்பாணம், கிளிநொச்சி, சங்கானை
சந்தைப்படுத்தல் மேற்பார்வையாளர் - வடக்கு மாகாணம்
சந்தைப்படுத்தல் உத்தியோகத்தர் - வடக்கு மாகாணம்
விநியோக உதவியாளர் - வயதெல்லை (18-35)
பொதி செய்பவர் - பெண்கள்
சாரதி – Light vehicle licence
விற்பனை - விற்பனை ஊக்குவிப்பாளர்கள் (பெண்கள்)
மேற்பார்வையாளர் - ஓய்வு பெற்ற உயர் நிலை ஆசிரியை
பகுதி நேர ஆசிரியை - ஆங்கிலம், சிங்களம்
பகுதி நேர வாகன சாரதி - ஆண்
துப்பரவுப்பணியாளர் - பெண்
உதவியாளர் - வாகன உதவியாளர் (பெண்)
ஆசிரியர் - தகுதிவாய்ந்த முன்பள்ளி ஆசிரியை
வெதுப்பக (வெதுப்பி) Bakery Bass ஆட்கள் தேவை
இரத்திரனியல் வெதுப்பக வேலையாள் - ஆண் (முன் அனுபவம் உடையோர்)
பலகார சமையல்காரர் - முறுக்கு, மிக்சர் போன்ற நொறுக்குத்தீனிகள் தயாரிப்பவர்கள் (ஆண், பெண்)
பொதி செய்பவர் - பெண்கள்
மருத்துவர்கள் - சுதேச மருத்துவர்கள் மற்றும் ஆராய்ச்சியாளர்கள்
தையல்கலைஞர் - பெண்
சாரதி – விற்பனையுடன் வாகனம் செலுத்துபவர்
EPF, ETF உடன் கவர்ச்சிகரமான சம்பளத்துடன் ஊக்கத்தொகை,
தகுதிவாய்ந்தவர்கள் கீழ் காணும் முகவரிக்கு சுய விபரக் கோவையை அனுப்பவும் அல்லது எமது வட்ஸ் அப் இலக்கத்திற்கு குறுந்தகவல் (Message) அனுப்பவும்.
வட்ஸ் அப் - 0779635551
முகவரி – 186/11 NFlash super detergent
நெசவுசாலை வீதி கோண்டாவில் கிழக்கு, கோண்டாவில்
607 A கே.கே.எஸ் வீதி, யாழ்ப்பாணம்.

காலைக்கதிர் Kalaikkathir மாலைப்பதிப்பு



# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம் மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
தொலைபேசி - 021 222 3000 இணையம் - onlinekathir.com

## சதிவலைச் சூத்திரதாரி யார்?

ஈஸ்டர் ஞாயிறு தொடர் குண்டுத் தாக்குதல் பெரும் அரசியல் சதி வலையின் ஒரு பகுதி என்று ஜெனிவாவில் ஐ.நா. மனித உரிமைகள் கவுன்ஸிலில் போய் நின்று பகிரங்கமாகக் குற்றம் சுமத்தியிருக்கின்றார் கொழும்பு பேராயர் கர்தினால் மல்கம் ரஞ்சித் ஆண்டகை.

இந்தச் சதியின் பின்புலம் யாது, சூத்திரதாரிகள் யார் என்பவை பற்றிய தகவல்களை அவர் வெளிப்படுத்தவில்லையாயினும் –

இந்தத் தொடர் குண்டுத் தாக்குதல் பற்றிய உண்மைகளைக் கண்டறிந்து, இந்தத் தாக்குதலில் பாதிக்கப்பட்டோருக்கு நீதி கிட்டச் செய்வதில் தற்போதைய அரசு நேர்மைத் திறத்துடன் ஈடுபடவில்லை என்று அவர் அறிவித்திருப்பதை நோக்கும்போது சில விடயங்களைப் பூடகமாக புரிந்து கொள்ள முடிகின்றது.

இது விடயத்தில் கைப்புண்ணுக்கு கண்ணாடி எதற்கு என்ற கேள்விதான் நியாயமான பதிலாக இருக்க முடியும்.

இப்போது பேராயர் குறிப்பிடும் அரசியல் சதித்திட்டம் பற்றிய சந்தேகம் பூர்வாங்கமாகத் தன்னும் எழுவதற்கு முன்னரே, இந்தக் குண்டுத் தாக்குதல் குறித்து முதலில் விசாரணை நடத்திய – நல்லாட்சி அரசு காலத்தின் – நாடாளுமன்றத் தெரிவுக்குழு அப்போது குறிப்பிட்ட ஒரு விடயம் இச்சமயத்தில் கவனத்தை ஈர்க்கின்றது.

நாடு அடுத்த ஜனாதிபதித் தேர்தலைப் பற்றிச் சிந்திக்கத் தலைப்பட்ட காலகட்டத்தில் இந்த குண்டுவெடிப்புத் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

அப்போது இருக்கின்ற அரசியல் தலைமைத்துவம் இராணுவ ரீதியில் கட்டுறுதியானது இல்லை என்ற நிலைப்பாட்டையும், இராணுவ ரீதியில் வலிமையான ஒரு தலைவரே நாட்டுக்குத் தேவை என்ற கருத்தியலையும் இந்தக் குண்டுத் தாக்குதல் தோற்றுவித்திருந்தது என்பதை நாம் மறந்துவிடவோ புறந்தள்ளி விடவோ முடியாது.

அப்போதைய நிலையில், இனி வரப்போகின்ற ஜனாதிபதித் தேர்தலில், அப்படி ஒரு கருத்தியலை மக்கள் மனதில் விதைத்து, அந்தச் சூழலில் வரும் ஜனாதிபதித் தேர்தலை எதிர்கொண்டு, வெற்றி வாகை சூடும் உள்நோக்குச் சூழ்ச்சித் திட்டத்துடன்தான் இந்த தாக்குதல் முன்னெடுக்கப்பட்டதா என்பதையும் நுணுகி ஆராய வேண்டுமென்று அந்த ஜனாதிபதித் தேர்தலுக்கு முன்னரே, அந்த நாடாளுமன்றத் தெரிவுக் குழு தனது அறிக்கையில் தெளிவாகக் குறிப்பிட்டிருந்தது.

அந்தத் தெரிவுக்குழு சந்தேகம் வெளியிட்ட விதத்திலேயே பின்னர் ஜனாதிபதித் தேர்தலும் மற்றைய விடயங்களும் நடந்தேறின.

அந்த வெடி குண்டுத்தாக்குதல் நாடளாவிய ரீதியில் எழுப்பிய மன உணர்வுகளின் பின்புலத்திலேயே – மக்கள் கருத்தியலின் அடிப்படையிலேயே – ஜனாதிபதித் தேர்தலில் கோட்டாபய ராஜபக்ஷ பெரு வெற்றியீட்டினார்.

இப்போது அந்தத் தொடர் குண்டுத் தாக்குதல் குறித்து நீதி, நியாயமான விசாரணைகள் நடத்தப்படவில்லை என்றும், அந்தத் தொடர் குண்டுத் தாக்குதல் பெரும் அரசியல் சதி வலைத் திட்டத்தின் ஓர் அங்கம் என்றும், பேராயர் ஜெனிவாவில் ஐ.நா. மனித உரிமை கவுன்ஸிலில் நின்று பகிரங்கமாகக் குற்றம் சுமத்தும் போது – அதில் புதைந்துள்ள – 'ஒன்றும் ஒன்றும் இரண்டு என்பது போன்ற' உண்மையை புரிந்து கொள்வது இலங்கை மக்களுக்கு அப்படி ஒன்றும் சிக்கலானது அல்ல.

தமிழர்களுக்கு எதிராக யுத்தத்தின் இறுதிக்கட்டத்தில் இழைக்கப்பட்டவை எனக் கூறப்படும் அடிப்படை மனித உரிமை மீறல்கள், யுத்தக் குற்றங்கள், மனித குலத்துக்கு எதிரான கொடூரங்கள் போன்றவற்றுக்கு யார் மீது குற்றச்சாட்டு விரல்கள் நீளுகின்றனவோ, அதே தரப்பின் மீதுதான் பேராயர் சுமத்தும் குற்றச்சாட்டின் விரலும் நீளுகின்றது. இந்த இரண்டு விடயங்களிலும் உண்மைகள் கண்டறியப்பட்டு, நீதி நிலை நாட்டப்பட்டு, பொறுப்புக் கூறல் நடைமுறைப்படுத்தப்பட்டு, மீள நிகழாமை உறுதிப்படுத்தப்பட்டு, இழப்பீடுகள் உரிய முறையில் வழங்கப்பட வேண்டுமானால், அதற்கான மனுநீதிச் சோழனின் மணி முதலில் ஐ.நா. மனித உரிமைகள் கவுன்ஸிலில்தான் எழுப்பப்பட வேண்டும். அதுதான் இப்போது நடக்கின்றது.



# பசுமை அறிவொளி நிகழ்ச்சித் திட்டம் தமிழ்த்தேசிய பசுமை இயக்கம் நடத்தியது

தமிழ்த்தேசியப் பசுமை இயக்கம் பசுமை அறிவொளி நிகழ்ச்சித்திட்டத்தை முன்னெடுத்துள்ளது.

மாணவர்களுக்குச் சூழல் அறிவைப் புகட்டிச் சூழல் விழிப்புணர்வை ஏற்படுத்துவதன் மூலம் சூழற் பாதுகாப்பில் அவர்களைப் பங்குபற்றுநர்களாக்கும் நோக்கோடு தமிழ்த்தேசியப் பசுமை இயக்கம் முன்னெடுத்துள்ள இந்தத் திட்டம் கடந்த ஞாயிற்றுக்கிழமை அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்பட்டது.

தமிழ்த்தேசியப் பசுமை இயக்கத்தின் சூழல் பாதுகாப்பு அணியின் துணைச் செயலாளர் த. யுகேஸ் தலைமையில் நடைபெற்ற இந்தத் திட்டத் தொடக்க நிகழ்ச்சியில் கனடா உதயன் பத்திரிகையின் பிரதம ஆசிரியரும் ரொறன்ரோவின் மனிதநேயக்குரல் அமைப்பின் தலைவருமான என்.ஆர்.லோகேந்திரலிங்கம் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டார்.

இந் நிகழ்ச்சியில் வளவாளர்களாக யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற்கல்லூரியின் விரிவுரையாளர் பா.பாலகணேசன், கரவெட்டி விக்னேஸ்வரக் கல்லூரியின் ஓய்வுநிலை அதிபர் மு. கனகலிங்கம் ஆகியோர் கலந்துகொண்டு கருத்துரைகளை வழங்கினர். தமிழ்த்தேசியப் பசுமை இயக்கத்தின் தலைவர் திட்டம் தொடர்பான விளக்கவுரையை ஆற்றினார்.

திட்டவுரையில் பொ. ஐங்கரநேசன் தெரிவிக்கையில் –

ஓர்அரசியற்கட்சிமேடைகளில்வெறுமனே அரசியலை மட்டும் பேசிக்கொண்டிருக்க முடியாது. அரசியல் மக்களுக்கானது என்ற வகையில், சமூகத்தைப் பாதிக்கும் அனைத்து விடயங்களிலும் அது கரிசனை கொள்வது கட்டாயமானதாகும். அதன் அடிப்படையிலேயே, பரீட்சைகளை மையப்படுத்திய கல்வி முறையால் வகுப்பறைகளுக்குள் புறொயிலர் கோழிகள்போல முடக்கப்பட்டிருக்கும் மாணவர்களை வகுப்பறைகளுக்கு வெளியே அழைத்து வந்து அவர்களிடையே இயல்பாகவே குடிகொண்டிருக்கும் இயற்கை மீதான ஆர்வத்தைச் சூழல் மீதான அக்கறையாக மாற்றும் வகையில் அவர்களுடன் சூழல் சார் அறிவைப் பகிர்ந்து கொள்ளவுள்ளோம். இதன் மூலம் சூழல் விழிப்புணர்வை ஏற்படுத்தி மாணவர்களைச் சூழல் பாதுகாப்பில் பார்வையாளர்களாக இல்லாது பங்குபற்றுநர்களாக ஆக்க முடியும்.

இதனை முன்னெடுப்பதற்கு வளவாளர்கள் கிராமங்கள் தோறும் மாணவர்களையும், பெற்றோர்களையும் சந்தித்துக் கலந்துரையாடல்களை நிகழ்த்தவுள்ளார்கள்.

தமிழ்த்தேசியப் பசுமை இயக்கத்தின் சூழல்பாதுகாப்பு அணியும் மாணவர் அணியும் இணைந்து முன்னெடுக்கும் இந்தத் திட்டம் கட்சி அரசியலுக்கும் தேர்தல் அரசியலுக்கும் அப்பாற்பட்டது. சூழல் நலனை, அதன் மூலம் இனத்தின் நலனை மாத்திரமே குறியாகக் கொண்டதாகும். இந்தத் திட்டம் தங்கள் பகுதிகளில் முன்னெடுக்கப்படவேண்டும் என்று விரும்பும் பொது அமைப்புகள், பொதுமக்கள் பசுமை இயக்கத்துடன் தொடர்பு கொண்டால் ஒழுங்கு செய்து தரப்படும் என்று குறிப்பிட்டார்.

அதிக எண்ணிக்கையான மாணவர்களும் பெற்றோர்களும் கலந்துகொண்ட இந்தத் திட்டத் தொடக்க நிகழ்ச்சியில் பங்கேற்ற மாணவர்கள் அனைவருக்கும் ரொறன்ரோவின் மனிதநேயக் குரலின் அனுசரணையில் கற்றல் உபகரணங்கள் வழங்கி வைக்கப்பட்டமையும் குறிப்பிடத்தக்கது.

# அம்பாந்தோட்டையில் மஞ்சள் அறுவடை

அம்பாந்தோட்டை மாவட்டத்தில் அறுவடை செய்யப்பட்ட மஞ்சளைக் கொள்வனவு செய்யும் வேலைத்திட்டம் திங்கட்கிழமை பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ தலைமையில் தங்காலை பழைய சந்தை வளாகத்தில் ஆரம்பமானது.

கரும்பு, சோளம், மரமுந்திரிகை, மிளகு, கறுவா, கராம்பு, வெற்றிலை உள்ளிட்ட சிறு பெருந்தோட்டப் பயிர்ச்செய்கை அபிவிருத்தி மற்றும் அதுசார்ந்த கைத்தொழில்கள் மற்றும் ஏற்றுமதி மேம்பாட்டு இராஜாங்க அமைச்சின் கீழ் உள்ள ஏற்றுமதி விவசாய திணைக்களத்தால் இந்த நிகழ்வு ஏற்பாடு செய்யப்பட்டது.

ஒரு கிலோ கிராம் மஞ்சளை 165 ரூபா என்ற அரசின் உத்தரவாத விலையில் கொள்வனவு செய்து அதற்கான பணத்தை மஞ்சள் விவசாயிகளுக்கு பிரதமர் வழங்கினார்.

'விவசாயிகளுக்கு உச்ச விலை – நுகர்வோருக்கு நிவாரண விலை' எனும் தொனிப்பொருளில் இந்த வேலைத்திட்டம் செயற்படுத்தப்படுகிறது.

பிரியந்த விக்ரமசிங்க, ஷாமா விஜேசிங்க, எம்.ஜி.ஜி. தர்மவங், பி.எம்.சரத், டபிள்யூ.ஏ.கருணாசேன, யு.ஜி.எதிரிசிங்க, தம்மிக்க சுஜித், நந்தசிறி வணிகசிங்க, அசங்க மதுவந்த மற்றும் நிமல் குணசேகர ஆகிய விவசாயிகளிடமிருந்து பிரதமர் மஞ்சளைக் கொள்வனவு செய்து அதற்கான பணத்தை வழங்கினார்.

இந்தச் சந்தர்ப்பத்தில் கரும்பு, சோளம், மரமுந்திரிகை, மிளகு, கறுவா, கராம்பு, வெற்றிலை உள்ளிட்ட சிறு பெருந்தோட்டப் பயிர்ச்செய்கை அபிவிருத்தி மற்றும் அதுசார்ந்த கைத்தொழில்கள் மற்றும் ஏற்றுமதி மேம்பாட்டு இராஜாங்க அமைச்சர் ஜானக வக்கும்புர, தென்மாகாண சபையின் தலைவர் சோமவன்ஸ கோதாகொட, மசாலா மற்றும் அதுசார்ந்த பொருள்கள் சந்தைப்படுத்தல் சபையின் தலைவி குமுதுனி குணசேகர மற்றும் மஞ்சள் விவசாயிகள் பலர் கலந்துகொண்டிருந்தனர்.

காலைக்கதிர் Kalaikkathir மாலைப்பதிப்பு



# ரஷ்ய அரச தொலைக்காட்சி வலையமைப்புகளில் ஊடுருவி இணையவழி தாக்குதல்



ரஷ்ய அரசு தொலைக்காட்சி வலையமைப்புகளில் அனானிமஸ் ஹாக்கிங் குழுவொன்று (Anonymous hacker group) ஊடுருவி இணைய வழித் தாக்குதல் நடத்தியுள்ளது.

அரச தொலைக்காட்சி வலைய மைப்புக்களுக்குள் ஊடுருவி உக்ரைனில் நடக்கும் போரின் காட்சிகளைக் காண்பித்ததாக அனானிமஸ் என்ற ஹாக்கிங் குழு கூறியுள்ளது.

அவர்களுடைய ஒரு டுவிட்டர் பதிவில், ரஷ்ய தொலைக்காட்சி சேவைகளான விங்க் (Wink) ஐ.வி.ஐ (Ivi) மற்றும் ரஷ்யா 24 (Russia 24) , சனல் வன் (Channel One) மற்றும் மொஸ்கோ 24 (Moscow 24 ) உள்ளிட்ட தொலைக்காட்சி சனல்களை ஹாக் செய்ததாக அனானிமஸ் ஹாக்கிங் குழு கூறியுள்ளது. அனானிமஸ் குழு இதுவரை கண்டிராத மிகப்பெரிய நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளதாக அந்தக் குழு வெளியிட்டுள்ள டுவிட்டர் பதிவில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, இந்த அநாமதேய இணைய வழி ஊடுருவல் குழு ஏற்கனவே ரஷ்ய அரசின் பல்வேறு இணையதளங்களை முடக்கியுள்ளதாகவும் தகவல்கள் வெளியாகியுள்ளன.



## உக்ரைனை விட்டு வெளியேறிய பிரிட்டிஷ் தூதர்

உக்ரைனுக்கான பிரிட்டிஷ் தூதர், தீவிரமான பாதுகாப்பு நிலைமை காரணமாக நாட்டை விட்டு வெளியேறியுள்ளார் என வெளியுறவு அமைச்சர் லிஸ்ட்ரஸ் தெரிவித்துள்ளார்.

முன்னர், படையெடுப்பின் போது பிரிட்டிஷ் தூதர் மெலிண்டா சிம்மன்ஸ் மற்றும் மீதமிருந்த ஊழியர்கள் தலைநகர் கீயவில் இருந்து மேற்கு உக்ரைனில் உள்ள வீவ் நகருக்குக் குடிபெயர்ந்தனர். அங்கு அச்சுறுத்தல் குறைவாக இருப்பதாகக் கருதப்பட்டது.

காமன்ஸ் வெளியுறவுக் குழுவிடம் ஆதாரங்களை அளித்து, நாட்டிலுள்ள அனைத்து பிரிட்டன் தூதரக அலுவலகங்களும் தற்போது மூடப்பட்டுவிட்டன என ட்ரஸ் கூறியுள்ளார்.







## கார்கிவ் நகரில் நடந்த சண்டையில் ரஷ்யாவின் இராணுவ ஜெனரல் சாவு

உக்ரைன் - கார்கிவ் நகர் அருகே நடந்த சண்டையின் போது ரஷ்ய இராணுவத்தின் உயர்மட்ட தளபதி ஒருவர் கொல்லப்பட்டார் என உக்ரைனின் பாதுகாப்பு அமைச்சக உளவுத்துறை தெரிவித்துள்ளது.

மத்திய இராணுவ மாவட்டத்தின் 41 ஆவது இராணுவ படை பிரிவின் முக்கிய ஜெனரல், தலைமைத் தளபதி மற்றும் முதல் துணைத் தளபதி ஆக இருந்த விட்டலி ஜெராசிமோவ் என்பவரே கொல்லப்பட்டார் என உக்ரைனின் பாதுகாப்பு அமைச்சு கூறியுள்ளது.

அத்துடன், உக்ரைனின் தாக்குதலில் மேலும் பல சிரேஷ்ட ரஷ்ய இராணுவ அதிகாரிகளும் கொல்லப்பட்டமையுடன், பலர் காயமடைந்தனர் என பாதுகாப்பு அமைச்சின் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. ஜெராசிமோவ் இரண்டாவது செச்சென் போரிலும் சிரியாவில் ரஷ்ய இராணுவ நடவடிக்கையிலும் பங்கேற்றதாக உக்ரேனிய உளவுத்துறை கூறுகிறது. அத்துடன், கிரிமியஷாவைக் கைப்பற்றும் போராட்டத்தின்போதும் பங்கேற்று பதக்கம் பெற்றார்.

உக்ரேனிய அதிகாரிகள் கொல்லப்பட்ட இராணுவ உயர் அதிகாரிகள் ஜெராசிமோவ் படத்தையும் டுவிட்டரில் பதிவிட்டுள்ளனர்.

## சிரியாவில் பயங்கரவாதத் தாக்குதல் 13 இராணுவ வீரர்கள் உயிரிழப்பு

சிரியாவின் மத்திய மாகாணமான ஹோம்ஸின் கிராமப்புறத்தில் பஸ் மீது தீவிரவாதிகள் நடத்திய தாக்குதலில் 13 இராணுவ வீரர்கள் கொல் லப்பட்டுள்ளனர்.

ஹோம்ஸின் கிராமப்புறத்தில் உள்ள பல்மைரா நகரின் பாலைவனப் பகுதியில் பஸ் மீது பயங்கரவாதிகள் தாக்குதல் நடத்தினர். இந்த தாக்குதலில் கொல்லப்பட்ட வீரர்களில் அதிகாரிகளும் அடங்குவர்.

பல்வேறு ஆயுதங்களைப் பயன்படுத்தி நடத்தப்பட்ட இந்த பயங்கரவாதத் தாக்குதலில் மேலும் 18 வீரர்கள் காயமடைந்துள்ளனர்.

இதற்கிடையில், மனித உரிமைகளுக்கான சிரிய கண்காணிப்பு தாக்குதலில் இறந்தவர்களின் எண்ணிக்கை 15 ஆக உள்ளது.

காயமடைந்தவர்களில் பெரும்பாலானவர்களின் நிலை கவலைக்கிடமாக உள்ளதால் பலி எண்ணிக்கை மேலும் அதிகரிக்க வாய்ப்புள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பாலைவனப்பகுதியில் சிரிய இராணுவத்துக்கு எதிராக ஐ.எஸ். அமைப்பினர் தொடர்ந்து தாக்குதல் நடத்தி வருகின்றனர். கடந்த ஜனவரியில், பல்மைரா அருகே இராணுவப் பஸ் மீது ஐ.எஸ். நடத்திய இதேபோன்ற தாக்குதலில் ஐந்து வீரர்கள் கொல்லப்பட்டனர் மற்றும் 20 பேர் காயமடைந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது





## ரஷ்யாவிலிருந்து எரிபொருள் இறக்குமதிக்குத் தடை; அமெரிக்கா தீவிரமாக ஆராய்கிறது

ரஷ்யாவிலிருந்து எரிபொருள் இறக்குமதியை தடை செய்வது குறித்து அமெரிக்க பிரதிநிதிகள் சபை ஆராய்ந்து வருவதாக பிரதிநிதிகள் சபையின் சபாநாயகர் நான்சி பெலோசி தெரிவித்துள்ளார்.

இது தொடர்பான சட்டத்தை சபையில் கொண்டு வந்து நிறைவேற்ற ஆலோசித்துள்ளதாகவும் அவர் கூறினார்.

அத்துடன், ரஷ்யாவின் அத்துமீறலை எதிர்கொள்ளும் வகையில் உக்ரைனுக்கு 10 ஆயிரம் டொலர் நிதி உதவிப் பொதியை அனுமதிப்பதற்கான தீர்மானத்தை காங்கிரஸ் நிறைவேற்ற விரும்புகிறது என்றும் நான்சி பெலோசி கூறினார். சர்வதேச பொருளாதாரத்திலிருந்து ரஷ்யாவை மேலும் தனிமைப்படுத்தும் வலுவான சட்டத்தை கொண்டு வருவது குறித்து பிரதிநிதிகள் சபை தற்போது ஆராய்ந்து வருகிறது.

இந்தச் சட்டம் அமெரிக்கா-விற்குள் ரஷ்ய எரிசக்தி வளங்களை இறக்குமதி செய்வதை தடை செய்யும். ரஷ்யா மற்றும் பெலாரஸ் உடனான வழக்கமான வர்த்தக உறவுகளை ரத்து செய்வதன் மூலம் உலக வர்த்தக அமைப்பிற்கான ரஷ்யாவின் அணுகலை முறியடிக்க எதிர்பார்த் துள்ளோம் எனவும் நான்சி பெலோசி தெரிவித்தார்.

# மேகதாது அணை விவகாரத்திலும் தமிழக அரசு அலட்சியம் காட்டினால் உரிமைகள் அனைத்தையும் இழந்துவிட்டு, கண்ணீர் விடும் நிலை வரும்

## பா.ம.க. இளைஞர் அணித் தலைவர் அன்புமணி ராமதாஸ் அறிக்கை



மேகதாது அணை விவகாரம் தொடர்பாக விவாதிப்பதற்காக அனைத்துக் கட்சிக் கூட்டத்தை கூட்டுமாறு பா.ம.க. இளைஞர் அணித் தலைவர் அன்புமணி ராமதாஸ் கோரிக்கை விடுத்துள்ளார். இது தொடர்பாக அன்புமணி ராமதாஸ் அறிக்கையொன்றை வெளியிட்டுள்ளார்.

காவிரி ஆற்றின் குறுக்கே மேகதாது அணைக்கு அனுமதி வழங்கும்படி மத்திய அரசை வலியுறுத்த டெல்லி செல்ல இருப்பதாகவும், அதற்கு முன் மேகதாது சிக்கல் குறித்து விவாதிக்க அனைத்துக் கட்சித் தலைவர்கள் கூட்டத்தை நடத்த இருப்பதாகவும் கர்நாடக முதலமைச்சர் பசவராஜ் பொம்மை கூறியிருக்கிறார்.

உச்சநீதிமன்றத்தையும், மத்திய அரசையும் ஏமாற்றி அந்தத் திட்டத்திற்கு அனுமதி பெற்ற கர்நாடக அரசு, தென்பெண்ணையாற்றின் குறுக்கே அணையை கட்டி முடித்துவிட்டது. மேகதாது அணை விவகாரத்திலும் தமிழக அரசு அலட்சியம் காட்டினால், காவிரி ஆற்றில் நமக்குரிய உரிமைகள் அனைத்தையும்இழந்துவிட்டு, கண்ணீர் விட வேண்டிய நிலை வரும்.

அத்தகைய நிலை ஏற்படுவதைத் தடுக்க, கர்நாடக அரசு மேற்கொள்ளும் நடவடிக்கைகளின் நோக்கத்தை புரிந்து கொண்டு, அவற்றை முறியடிப்பதற்கான பதில் நடவடிக்கைகளை தமிழக அரசு மேற்கொள்ள வேண்டியது கட்டாயமாகும். அதற்கான உத்திகளை வகுப்பது குறித்து விவாதிக்க அனைத்துக் கட்சித் தலைவர்கள் கூட்டத்தை தமிழக அரசு விரைவில் நடத்த வேண்டும்.

அதுமட்டுமன்றி, காவிரி ஆற்றின் குறுக்கே எந்த நோக்கத்திற்காகவும், எந்த விதமான அணையையும் கட்ட அனுமதி அளிக்கக்கூடாது என்று பிரதமர் மோடியை, முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் தலைமையில் அனைத்துக் கட்சித் தலைவர்கள் குழுவினர் நேரில் வலியுறுத்த வேண்டும், என்று தனது அறிக்கையில் அவர் கூறியுள்ளார்.

# உத்தரப் பிரதேசத்தில் மீண்டும் வருமாம் பா.ஜ.க. ஆட்சி என்கின்றன கணிப்புக்கள்



உத்தரப் பிரதேசம், பஞ்சாப், உத்தரகாண்ட், மணிப்பூர் மற்றும் கோவா ஆகிய 5 மாநிலங்களுக்கான தேர்தலுக்கான வாக்குப்பதிவு இன்று மாலை 6 மணியுடன் நிறைவடைந்த நிலையில், தேர்தலுக்குப் பிந்தைய கருத்துக்கணிப்பு முடிவுகள் வெளியாகியுள்ளன. 2024இல் நடைபெற உள்ள மக்களவைத் தேர்தலுக்கு முன்னோட்டமாக இந்த 5 மாநிலங்களுக்குமான தேர்தல்கள் மிகுந்த எதிர்பார்ப்பை ஏற்படுத்தியுள்ளன.

403 தொகுதிகள் கொண்ட உத்தரப் பிரதேசத்தில் பா.ஜ.க., சமாஜ்வாடி கட்சிகளுக்கிடையே நேரடிப் போட்டியுள்ளது. இந்த மாநிலத்தில் மேட்ரைஸ் அமைப்பு நடத்திய கருத்துக் கணிப்பில் பா.ஜ.க. 262 முதல் 277 தொகுதிகள் வரை கைப்பற்றி ஆட்சியை தக்க வைக்கும் என தெரிவிக்கப்பட்டுள்ளது. பெரும்பான்மை பெற 202 தொகுதிகளில் வெற்றி பெற்றால் போதுமானதாகும். சமாஜ்வாடி கட்சி கூட்டணி இரண்டாம் இடத்தை பிடிக்கும் என கருத்துக் கணிப்பில் தெரியவந்துள்ளது. அந்த கூட்டணிக்கு 119 முதல் 134 இடங்கள் வரை கிடைக்கும் என்று கூறப்பட்டுள்ளது. காங்கிரஸ் கட்சி 3 முதல் 8 தொகுதிகள் வரையிலும், பகுஜன் சமாஜ் கட்சி 7 முதல் 15 தொகுதிகளிலும், மற்றவை 2 முதல் 6 தொகுதிகளிலும் வெற்றி பெறலாம் என கருத்துக் கணிப்பு முடிவுகள் தெரிவிக்கின்றன.

இதேபோல் பி-மார்க் நடத்திய கருத்துக் கணிப்பில் பா.ஜ.க. கூட்டணி 240 இடங்களை கைப்பற்றி ஆட்சியை தக்க வைக்கும் என தெரியவந்துள்ளது. சமாஜ்வாடி கட்சி கூட்டணிக்கு 140 இடங்களும், பகுஜன் சமாஜ் கட்சி 17 இடங்களும் காங்கிரசுக்கு 4 இடங்களும் கிடைக்கும் என கருத்துக்கணிப்பு தெரிவிக்கிறது. ஆனால், கருத்துக் கணிப்பு முடிவுகள் முக்கியமில்லை, நாங்கள் 300 இடங்களுக்கு மேல் பெறுவோம், என சமாஜ்வாடி கட்சித் தலைவர் அகிலேஷ் யாதவ் தெரிவித்துள்ளார்.




## இந்தியாவில் 179 கோடி டோஸ் கொரோனாத் தடுப்பூசி செலுத்தப்பட்டுள்ளதாக சுகாதாரத் துறை தகவல்

இந்தியாவில் கொரோனாத் தடுப்பூசிகள் செலுத்தும் பணிகள் கடந்த ஆண்டு ஜனவரி மாதம் 16 ஆம் திகதி தொடங்கின. இதில், முன்களப்பணியாளர்கள் மற்றும் சுகாதாரப் பணியாளர்களுக்கு முன்னுரிமை அடிப்படையில் தடுப்பூசிகள் செலுத்தப்பட்டன.

அதன்பின், கடந்த ஆண்டு ஜூனில் இருந்து இந்தியா முழுவதும் 18 வயது பூர்த்தியடைந்த அனைவருக்கும் தடுப்பூசிகள் செலுத்தும் பணிகள் தீவிரப்படுத்தப்பட்டன.

இந்நிலையில், இந்தியாவில் மொத்தம் 179.09 கோடிக்கும் மேற்பட்ட டோஸ்கள் அளவுக்கு கொரோனாத் தடுப்பூசிகள் செலுத்தப்பட்டுள்ளன என இந்திய மத்திய சுகாதாரத் துறை தெரிவித்துள்ளது. முன்களப் பணியாளர்கள் மற்றும் 60 வயதுக்கு மேற்பட்ட 2.07 கோடிக்கும் அதிகமானோருக்கு கொரோனா பூஸ்டர் தடுப்பூசி செலுத்தப்பட்டுள்ளதாகவும் அது குறிப்பிட்டுள்ளது.

## 13 மாநிலங்களவை எம்.பி. இடங்களுக்கான தேர்தல் இம்மாத இறுதியில் நடைபெறும்

நாடாளுமன்ற மாநிலங்களவையில் காங்கிரஸ் மூத்த தலைவர்களான ஏ.கே.அந்தோணி, ஆனந்த் சர்மா உள்பட 13 எம்.பிக்களின் பதவிக்காலம் முடிவடையவுள்ள நிலையில், அந்த காலியிடங்களை நிரப்ப இம்மாதம் 31 ஆம் திகதி தேர்தல் நடைபெறவுள்ளதாக தேர்தல் ஆணையம் அறிவித்துள்ளது.

பஞ்சாப்பில் 5, கேரளாவில் 3, அசாமில் 2, இமாசல பிரதேசம், திரிபுரா மற்றும் நாகாலாந்தில் தலா ஒவ்வொரு இடத்துக்கும் தேர்தல் நடக்கவிருக்கிறது.

இந்தத் தேர்தலுக்கான வேட்புமனுத் தாக்கல் 14 ஆம் திகதி தொடங்கி, 21 ஆம் திகதி வரை நடைபெறவிருக்கிறது. 31 ஆம் திகதி தேர்தல் முடிந்தவுடன் அதே நாள் மாலை 5 மணிக்கு வாக்கு எண்ணிக்கை ஆரம்பமாகும் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.





# பஞ்சாப் மாநிலத்தில் ஆம் ஆத்மி கட்சி ஆட்சியைப் பிடிக்குமென கணிப்புகள்

உத்தரப் பிரதேசம், பஞ்சாப், உத்தரகாண்ட், மணிப்பூர் மற்றும் கோவா ஆகிய 5 மாநிலங்களில் 7 கட்டங்களாக வாக்குப்பதிவு நடத்தப்பட்டுள்ள நிலையில், 117 தொகுதிகளைக் கொண்ட பஞ்சாப் மாநிலத்தில் பெப்ரவரி 20 இல் ஒரே கட்டமாக தேர்தல் நடத்தப்பட்டது. தற்போது அந்த மாநிலத்திற்கான தேர்தலுக்கு பிந்தைய கருத்துக் கணிப்பு முடிவுகள் வெளியாகியுள்ளன. இதில் பெரும்பாலான கருத்துக் கணிப்பு முடிவுகள் ஆம் ஆத்மி கட்சிக்கு சாதகமாக உள்ளன.

இந்தியா டுடே கருத்துக் கணிப்பில் ஆம் ஆத்மி கட்சி 76 முதல் 90 தொகுதிகள் வரை கைப்பற்றி ஆட்சியைப் பிடிக்கும் என தெரிவிக்கப்பட்டுள்ளது. ஆளும் காங்கிரஸ் கட்சி 9 முதல் 31 தொகுதிகளிலும், சிரோமணி அகாலி தளம் கூட்டணி 7 முதல் 11 தொகுதிகளிலும், பா.ஜ.க. கூட்டணி 1 முதல் 4 தொகுதிகளிலும் வெற்றி பெறும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஏ.பி.பி.சிவோட்டர் அமைப்பு நடத்திய கருத்துக் கணிப்பில் ஆம் ஆத்மி கட்சி 51 முதல் 61 இடங்கள் வரையில் பிடிக்கலாம் என தெரியவந்துள்ளது. காங்கிரஸ் 22 முதல் 28 தொகுதிகளும், சிரோமணி அகாலி தளம் கூட்டணி 20 முதல் 26 தொகுதிகள் வரையிலும், பா.ஜ.க. 20 முதல் 26 தொகுதிகள் வரையிலும் கைப்பற்றலாம் என தெரிவிக்கப்பட்டுள்ளது. டைம்ஸ் நவ் கருத்துக் கணிப்பிலும் ஆம் ஆத்மிக்கே அதிக தொகுதிகள் கிடைக்கும் எனதெரியவந்துள்ளது. ஆம் ஆத்மி 70 தொகுதிகளிலும், காங்கிரஸ் 22 தொகுதிகளிலும், சிரோமணி அகாலி தளம் ஆகியன பா.ஜ.க. தலா 19 தொகுதிகளிலும் வெற்றி பெறலாம் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

ரிபப்ளிக் ரீவியின் கருத்துக் கணிப்பிலும் ஆம் ஆத்மிக்கு 100 இடங்கள் கிடைக்கும் என தெரியவந்துள்ளது. காங்கிரஸ் கட்சி 10 இடங்களை பிடிக்கலாம் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

# சிறைக் கைதிகளின் பிள்ளைகளுக்கு கற்றல் உபகரணங்கள் அன்பளிப்பு



திருகோணமலை சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டுள்ள கைதிகளின் 75 பிள்ளைகளுக்கு காற்பாதணி மற்றும் கற்றல் உபகரணங்கள் வழங்கி வைக்கப்பட்டன.

திருகோணமலை சிறைச்சாலையும், திருகோணமலை சிறைச்சாலை சிறைக் கைதிகள் நலன்புரிச் சங்கமும் இணைந்து இதை ஏற்பாடு செய்திருந்தது.

இந்த நிகழ்வு சிறைச்சாலை அத்தியட்சகர் வசந்த குமார டேப் தலைமையில் திருகோணமலை நகர சபை கேட்போர் கூடத்தில் நடைபெற்றது.

இதில் சிறைக்கைதிகள் மற்றும் விளக்கமறியல் கைதிகளின் பிள்ளைகளுக்கு கற்றல் உபகரணங்கள் வழங்கி வைக்கப்பட்டன.

# முன்னாள் போராளி தாக்கப்பட்டு மரணம்

திருகோணமலை மூதூர், கங்குவேலி பகுதியில் நேற்று இளைஞர்களின் தாக்குதலுக்குள்ளான முன்னாள் போராளி ஒருவர் உயிரிழந்துள்ளார் எனப் பொலிஸார் தெரிவித்துள்ளனர். அதே பகுதியில் வசித்து வந்த ஒரு பிள்ளையின் தந்தையான சிவபாலன் சத்தியபவான் (44வயது) என்ற முன்னாள் போராளியே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

மதுவுக்கு அடிமையான இந்த நபர் தனது சித்தியுடன் கங்குவேலி பகுதியில் வசித்து வந்தார். அந்த பகுதியில் உள்ள இளைஞர் ஒருவரின் கையடக்கத் தொலைபேசியை திருடி அதனை விற்பனை செய்து மது வாங்குகிறார் எனஅந்த இளைஞனுக்கு தகவல் கிடைத்துள்ளது.

இதனையடுத்து சம்பவ இடத்துக்குச் சென்ற இளைஞன் அந்த நபரை தாக்கியுள்ளார். தாக்குதலுக்கு உள்ளான நபர் வீடு திரும்பிய நிலையில், தனக்கு மயக்க நிலை ஏற்பட்டுள்ளதுடன், தலைப்பகுதியில் விறைப்பு ஏற்பட்டுள்ளதாகவும் கூறியுள்ளார்.

இந்நிலையில், வழமை போன்று குறித்த நபர் உறங்கியுள்ளார். நேற்று மாலை சென்று பார்த்தபோது அவர் மயக்க நிலையில் இருந்தமையை அடுத்து வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்ட போது அவர் உயிரிழந்துள்ளார் என அறி விக்கப்பட்டுள்ளது.

உயிரிழந்தவரின் சடலம் மூதூர் தள வைத்தியசாலை பிரேத அறையில் வைக்கப்பட்டு சட்ட வைத்திய நிபுணரின் சோதனைக்காக திருகோணமலை பொது வைத்தியசாலைக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

# விவசாயிகளுக்கு விருது வழங்கும் விழா

(வி.ரி.சகாதேவராஜா)




கிழக்கு மாகாண விவசாய திணைக்களத்தின் ஏற்பாட்டில் அம்பாறை மாவட்டத்தில் தெரிவுசெய்யப்பட்ட சிறந்த விவசாயிகளுக்கு விருது வழங்கும் விழா நடைபெற்று வருகிறது.

அக்கரைப்பற்று விவசாய வலயத்தில் தெரிவு செய்யப்பட்ட விவசாயிகளுக்கான விருது வழங்கி பரிசு வழங்கி பாராட்டு விழா நேற்று அக்கரைப்பற்று காரியாலயத்தில் வலய உதவி விவசாயப் பணிப்பாளர் திருமதி அழகுமலர் ரவீந்திரன் தலைமையில் நடைபெற்றது.

அம்பாறை மாவட்ட பிரதி விவசாயப் பணிப்பாளர் ஜி. திசாநாயக்க கலந்து கொண்டு இந்த விருதுகளையும் பணப் பரிசில்களை சான்றிதழ்களையும் வழங்கி வைத்தார். விவசாய போதனாசிரியர் திருமதி சசிகலா ரகுநந்தனுடன் ஏனைய உத்தியோகத்தர்களும் நிகழ்வில் கலந்து சிறப்பித்தார்கள்.

# மடத்தடியில் மகா கணபதி சண்டி ஹோமம்



(காரைதீவு நிருபர் சகா)

நிந்தவூர், மாட்டுப்பளை அருள்மிகு ஸ்ரீ மீனாட்சி அம்மன் ஆலயத்தில் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை மகா கணபதி மற்றும் சண்டி ஹோமம் கிரியாதிலகம், கிரியாகால கலாமணி விபுலமணி சிவஸ்ரீ சண்முக மகேஸ் வரக்குருக்ககளின் தலைமையில் சிறப்பாக நடைபெற்றது. உதவியாக சிவஸ்ரீ மயுரவதன குருக்கள் செயற்பட்டார்.

ஆலய தலைவர் கி.ஜெயசிறில் மற்றும் நிர்வாக சபையினரின் ஏற்பாட்டில் நடைபெற்ற கணபதி சண்டி ஹோமம் நேற்றுகாலை 11 மணி அளவில் அபிஷேகத்துடன் ஆரம்பமானது, ஆலய ஆலோசகர் வி.ரி.சகாதேவராஜாவின் நெறிப்படுத்தலில் யாகபூஜைகள் இடம்பெற்றன.

யாகத்தில் பல திரவியங்கள் ஆகுதியாக்கப்பட்டன. பக்தர்கள் யாகத்தில் தோன்றிய புகையை நுகர்வதில் ஆர்வம் காட்டினார்கள். மாவட்டத்தின் பல பாகங்களிலுமிருந்து பக்தர்கள் கூட்டம் கூட்டமாக வந்து கலந்து கொண்டார்கள்.ஆலய கும்பாபிஷேகத்திற்கு முன்னதாக தடை பிசகுகளை நீக்குமுகமாக இது நடத்தப்பட்டது.

# டிப்பர் விபத்தில் சாரதி படுகாயம்

(எவ்.முபாரக்)

திருகோணமலை மாவட்டத்தின் சேருநுவர பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில் மணல் ஏற்றச்சென்ற டிப்பர் வாகனமொன்று இன்று காலை குடைசாய்ந்து விபத்துக்குள்ளானதில் அதன் சாரதி படுகாயமடைந்து கந்தளாய் தள வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

விபத்தில் வான்எல பகுதியைச் சேர்ந்த 33 வயதுடைய நிசாந்த பெரேரா என்பவரே படுகாயங்களுக்குள்ளாகியுள்ளார் என வைத்தியசாலை பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

கங்கைப் பகுதிக்கு மணல் ஏற்றுவதற்கு சென்ற போதே அதிக வேகம் மற்றும் சாரதியின் நித்திரை கலக்கம் போன்றவற்றால் டிப்பர் வீதியை விட்டு விலகி காட்டுப் பகுதியில் குடை சாய்ந்து விபத்துக்குள்ளானதாக பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

# மட்பாண்ட உற்பத்திக் கிராமம் ஏறாவூரில் ஆரம்பித்து வைப்பு

பாரம்பரிய பிரம்புகள், பித்தளை, மட்பாண்டங்கள், பனம் பொருள்கள் மற்றும் கிராமிய கைத்தொழில் மேம்பாட்டு இராஜாங்க அமைச்சு முன்னெடுத்து வரும் விடே திட்டத்தின் கீழ் தேசிய அருங்கலைகள் பேரவையினால் ஏறாவூர்பற்று செங்கலடி பிரதேச செயலாளர் பிரிவில்லுள்ள ஏறாவூர் நான்காம் பிரிவில் மட்பாண்ட சௌபாக்கிய உற்பத்தி கிராமம் ஒன்று இராஜாங்க அமைச்சர் சதாசிவம் வியாழேந்திரனின் ஆலோசனைக்கமைய உருவாக்கப்பட்டுள்ளது.

இந்த மட்பாண்ட சௌபாக்கிய உற்பத்தி கிராமத்தின் பணிகளையும் புதிய கட்டிடத் தொகுதியையும் இராஜாங்க அமைச்சர் வியாழேந்திரன் பிரதம அதிதியாகக் கலந்து கொண்டு சம்பிரதாயபூர்வமாக ஆரம்பித்து வைத்தார். ஏறாவூர் பற்று பிரதேச செயலாளர் எஸ்.தனபாலசிங்கம் தலைமையில் திறப்பு விழா நிகழ்வு நடைபெற்றது.



# ‘அவளுக்கு’ பெருமை சேர்க்க இருமுறை சிந்திக்கவேண்டாம்!

## மகளிர்தின வாழ்த்தில் பிரதமர் மஹிந்த



ஒரு தாயாக, மகளாக, சகோதரியாக மற்றும் பாட்டியாக ஒட்டுமொத்த சமுதாயத்தையும் வழிநடத்தும் துணிச்சலான பெண்களின் அர்ப்பணிப்பை நினைவுகூரும் சர்வதேச மகளிர் தினத்தில் உங்கள் அனைவருக்கும் வாழ்த்துக்களை பகிர்ந்துக் கொள்வதில் மிக்க மகிழ்ச்சி அடைகிறேன் என பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார். மகளிர்தின வாழ்த்தில் மேலும் தெரிவித்த அவர் -

ஒரு நிலையான சமுதாயத்துக்காகத் தன் வாழ்நாள் முழுவதும் கருமை, ஆளுமை ஆகியவற்றைப் பகிரும் ஒரு பெண்ணின் பெருமையை ஒரு நாளுக்கு மட்டும் வரையறுக்க முடியாது.

மனித இனத்தை மாற்றிய அனைத்து தீர்க்கதரிசிகளின் பிறப்பு முதல், மனித இறப்பை அடையும் வரை அனைத்துக்கும் பெண்தான் காரணம் என்பது இரகசியமல்ல. இதனால்தான், பிரபல ரஷ்ய எழுத்தாளர் மாக்சிம் கோர்க்கி, சூரிய ஒளி மற்றும் தாய்ப்பாலில் இருந்தே உலகம் படைக்கப்பட்டது என்று குறிப்பிட்டிருக்கிறார்.

வீரப் பெண் தலைமுறையின் வரலாற்றை பின்பற்றி இலங்கைப் பெண்கள் இன்று சமூகப் பொறுப்புடன் தொடர்ந்து முன்னேறி வருகின்றனர்.

இந்த தைரியமான பெண்களுக்கு அதிகாரம் அளிப்பதற்காக நமது அரசாங்கம் தொடர்ந்து பணியாற்றும் என்று நான் நம்பிக்கையுடன் தெரிவிக்கிறேன். ‘நிலையான எதிர்காலத்துக்கு இன்று பாலின சமத்துவம்’ என்ற சர்வதேச எண்ணக்கருவின் கீழ் கொண்டாடப்படும் இம்முறை சர்வதேச மகளிர் தினத்தில் உங்களுக்கு எதிரான வன்முறைகளும் பாகுபாடுகளும் இலங்கை சமூகத்திலிருந்து துடைத்தழிக்கப்படும் தினத்தை உருவாக்குவதே எமது எதிர்பார்ப்பாகும்.

‘அவள் ஒரு நாடு, ஒரு தேசம், ஓர் உலகம்’ என்ற தொனிப்பொருளில் கொண்டாடப்படும் சர்வதேச மகளிர் தினக் கொண்டாட்டத்தின் ஊடாக நாட்டின் உயிர்நாடியாக விளங்கும் பெண்களின் பங்கு சரியான முறையில் பாராட்டப்படும் என நம்புகிறேன்.

கொவிட் தொற்றுநோய் நிலைமைக்கு மத்தியில் ஏற்பட்ட பல்வேறு சிரமங்களை சமாளிப்பதற்கு தொலைநோக்கு சிந்தனையுடன், சிக்கனமாகவும் பொறுமையாகவும் செயற்படும் பெண்கள் நாட்டில் காணப்படும் சவால்களை வெற்றி கொள்வதற்கு பெறுக் கொடுக்கும் சிறந்த பங்களிப்பு நம் அனைவருக்குமானதைரியமாகும்.நீங்கள்‘அவளுக்கு’ பெருமை சேர்ப்பதற்கு இருமுறை சிந்திக்க வேண்டாம் என்று கேட்டுக் கொள்கிறேன். - என்றுள்ளது.

# எரிபொருள்களுக்கு வரிசையில் எம்மால் காத்திருக்க முடியாது!

## வைத்தியர்கள் தெரிவிப்பு

எரிபொருளுக்காக வரிசையில் காத்திருக்க முடியாது என அகில இலங்கைவைத்தியஉத்தியோகத்தர் சங்கம் தெரிவித்துள்ளது.

எரிபொருளுக்காக வரிசையில் காத்திருக்கின்றமை தொடர்பாக இந்த சங்கம் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவிற்கு கடிதம் ஒன்றை அனுப்பி வைத்துள்ளது.

மருத்துவர்கள் அவசர அழைப்பு மற்றும் சாதாரண பணிகளுக்காகத் தங்களது சொந்த வாகனங்களைப் பயன்படுத்தி வருகின்றனர் எனவும் சுட்டிக்காட்டியுள்ளது.

வருடம் முழுவதும் 24 மணித்தியாலங்களும் கடமையில் ஈடுபட்டு வரும் மருத்துவர்கள் எரிபொருளுக்காக வரிசையில் காத்திருக்கின்றமை பொருத்தமற்றது எனவும், எரிபொருள் வழங்குவதில் மருத்து-வர்களுக்கு முன்னுரிமை வழங்கப்பட வேண்டுமெனவும் அந்தச் சங்கம் ஜனாதிபதியிடம் கோரியுள்ளது.

மருத்துவர்கள் தாமதமின்றி எரிபொருளைப் பெற்றுக்கொள்வதற்குத் தேவையான நடவடிக்கைகளை எடுக்குமாறு சங்கம், ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவிடம் கோரியுள்ளது.

# அமெரிக்க உயர் ராஜதந்திரிகள் இருவர் இலங்கைக்கு விஜயம்!



அமெரிக்காவின் உயர் ராஜதந்திரிகள் இருவர் இந்த மாதம் இலங்கைக்கு விஜயம் செய்ய உள்ளனர்.

எதிர்வரும் 22 ஆம் திகதி அமெரிக்க இராஜாங்கத் திணைக்களத்தின் அதிகாரிகள் இவ்வாறு இலங்கை விஜயம் செய்ய உள்ளனர். ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ, பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ, எதிர்க்கட்சி முக்கியஸ்தர்கள் மற்றும் தமிழ்த்தேசியக்கூட்டமைப்பின்தலைவர் இரா.சம்பந்தன் ஆகியோரை இவர்கள் சந்திக்க உள்ளனர்.

அமெரிக்க ராஜாங்கத் திணைக்களத்தின் அரசியல் விவகாரங்களுக்குப் பொறுப்பான இராஜாங்கச் செயலாளர் விக்டோரியா நூலண்ட் மற்றும் துணை இராஜாங்கச் செயலாளர் டொனால்ட் லூ ஆகியோரே இவ்வாறு இலங்கை விஜயம் செய்ய உள்ளனர்.

மனித உரிமை விவகாரங்கள், பொறுப்புகூறுதல் மற்றும் முதலீடுகள் என்பன தொடர்பாக இந்த விஜயத்தின் போது கவனம் செலுத்தப்பட உள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

# சூடு பிடிக்கும் கொழும்பு அரசியல் அரசுக்கு எதிராக புதிய கூட்டணி!

அரசாங்கத்தின் பங்காளிக் கட்சிகள் தற்போது புதிய கூட்டணியை உருவாக்குவதற்கான கலந்துரையாடலில் ஈடுபட்டு வருகின்றன எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

முன்னாள் ஜனாதிபதிகளான மைத்திரிபால சிறிசேன அல்லது சந்திரிகா பண்டாரநாயக்கா இந்த புதிய கூட்டணிக்கு தலைமை தாங்குவர் என்று கொழும்பு ஊடகம் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது. அரசில் முக்கிய பங்கு வகித்த அமைச்சர்கள் அண்மையில் பதவி நீக்கப்பட்டுள்ள நிலையில், அவர்களும் அரசாங்கத்துக்கு எதிரான கருத்துக்களை வெளியிட்டு வருகின்றனர்.

மேலும், அமைச்சர்களுடன் கலந்துரையாடாமல் ஜனாதிபதி தீர்மானங்களை மேற்கொள்வதால், அமைச்சுக்களை இழந்தாலும் இழப்பதற்கு இனி எதுவுமில்லை என அரசியல் கட்சிகளின் உறுப்பினர்கள் கருதுகின்றனர் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

தாங்கள் இரண்டாம் தரத்தினராக உணர்கின்றனர் எனவும் கூட்டணி அமைப்பதற்கான கலந்துரையாடலில் ஈடுபட்டு வருவதாகவும் அதுவும் நிச்சயம் நடக்கும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளதாக அந்த செய்தியில் கூறப்பட்டுள்ளது.

# அமைச்சரவைக் கூட்டத்தில் ஜனாதிபதி பங்கேற்கவில்லை

நேற்றைய தினம் நடைபெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ பங்குபற்றவில்லை எனத் தெரிவிக்கப்படுகின்றது.

விமல் வீரவன்ஸ மற்றும் உதய கம்மன்பில ஆகியோரின் அமைச்சுப் பதவி பறிக்கப்பட்டதன் பின்னர் நடைபெற்ற முதலாவது அமைச்சரவைக் கூட்டம் இதுவென்பது குறிப்பிடத்தக்கது.

எவ்வாறெனினும் என்ன காரணத்துக்காக ஜனாதிபதி அமைச்சரவைக் கூட்டத்தில் பங்கேற்கவில்லை என்பது பற்றிய விவரங்கள் வெளியிடப்படவில்லை.

# அந்நியச் செலாவணியின் கையிருப்பு பெப்ரவரியில் 231 கோடி டொலர்

## மத்தியவங்கி அறிவிப்பு

பெப்ரவரி மாதத்தில் இலங்கையின் அந்நியச் செலாவணி கையிருப்பு 231 கோடி டொலர்களாக இருந்ததாக மத்திய வங்கி தெரிவித்துள்ளது.

இதன்படி, இலங்கையின் அந்நிய செலாவணி கையிருப்பு 20.25 கோடி அமெரிக்க டொலர்களாக இருப்பதாக தெரிவிக்கப்படுகின்றது.

இலங்கையின் தங்க கையிருப்பு 9.8 கோடி அமெரிக்க டொலர்களாக உள்ளதாக மத்திய வங்கியின் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# நாட்டில் மருந்துகள் பெரும் பற்றாக்குறை மூடப்படும் மருந்தகக் களஞ்சியசாலைகள்



## ரவி குமுதேஷ் எச்சரிக்கை

மருந்துகளை இறக்குமதி செய்யும் திட்டம் இல்லை என்றால், பிரச்சினையை மறைக்காமல், பொதுமக்களின் பாதுகாப்புக்காக மருந்துகளுக்கான மனிதாபிமான உதவியைப் பெற விண்ணப்பம் செய்ய வேண்டும் என சுகாதார நிபுணர்கள் கூட்டமைப்பு தெரிவித்துள்ளது.

சுகாதார நிபுணர்கள் கூட்டமைப்பின் தலைவர் ரவி குமுதேஷ் இதனைத் தெரிவித்துள்ளார்.

இலங்கையில் தற்போது தனியார் மருந்தகங்களுக்கு மருந்துகளை வழங்கும் 60 வீதமான களஞ்சியசாலைகள் ஏற்கனவே மூடப்பட்டுவிட்டன எனவும், மீதமுள்ளவை 4 முதல் 6 வாரங்களில் மூடப்படும் என்றும் தெரிவித்துள்ளார்.

இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 08.03.2022இல் வெளியிடப்பெற்றது.